# படிமுறைத்தமிழ் - பெருவிழா

# Padimurai Tamil Gala

**2026**



## May 31st, 2026

**ஞாயிற்றுக்கிழமை 5:00 PM**

**Tel: 416-869-8252 | 416-821-5773 | padimuraitamil.com**

Platinum Sponsor




Platinum Sponsor

# படிமுறைத்தமிழ் ஒன்றியம்
## PADIMURAI TAMIL FEDERATION

2370 Midland Avenue #A8, Scarborough, Ontario, M1S 5C6
416-869-8252 | 416-821-5773 | Email: info@padimuraitamil.com

### படிமுறைத்தமிழ்ப் பணிகள்

படிமுறைத்தமிழ் ஒன்றியம் என்பது, எமது அடுத்த தலைமுறையினரை, தமிழ்மொழியிற் சிறந்து விளங்கக் கூடியவர்களாகவும், தமிழர் வாழ்வியலைப் பின்பற்றக் கூடியவர்களாகவும் வளர்த்தெடுக்கும் பணியில் அயராது உழைத்து வரும், உலகம் முழுமையிலும் உள்ள நிறுவனங்களை ஒன்றிணைத்த, ஓர் அமைப்பாகும்.

"படிமுறைத் தமிழ்" என்னும் மொழியியலின் அடிப்படையில் உருவான கற்பித்தல் முறையினை, உலகின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லும் பணியை முதன்மையாகக் கொண்டு, இவ்வமைப்பானது செயற்பட்டு வருகின்றது.

மேலும் **தமிழ்மொழி, தமிழர் வாழ்வியல், தமிழர் வரலாறு** போன்ற துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டுவரும் அறிஞர்களையும், முத்தமிழாகிய **இயல், இசை, நாடகம்** ஆகிய துறைகளிற் சிறந்து விளங்குவதுடன், அவற்றை அடுத்த தலைமுறையினருக்குக் கற்பித்து, அத்துறைகளில் ஆற்றல் மிக்கோரை உருவாக்கிவரும் **பேராசான்களையும்** சிறப்பிப்பது எமது முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

தமிழர் வாழும் நாடுகளில், தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டுத் தமது அளப்பரிய சேவையினை, தமிழ்ச் சமுதாயத்திற்காகத் தியாகம் செய்துவரும் ஆசிரியர்களைச் சிறப்பிப்பதும் நமது சமுதாயக் கடமையாகும்.

தமிழர் வாழும் நாடுகள் தோறும், தமிழ்மொழி கற்றல், கற்பித்தலில் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கான தீர்வுகளைக் கருத்தரங்குகள் மூலம் கண்டறிந்து, பயிற்சி வழங்குவதும் எமது பணியாகும்.

ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களாக வர விரும்புவோர், தமிழ் மொழியியல் அறிவு பெற்று, அறிதிறன் கொண்டவர்களாகத் திகழும் வண்ணம் **"பயனாக்க மொழியியல்"** வகுப்புகளை நடத்தி வருகின்றோம்.

தமிழ் மொழியை இழந்து விட்ட தமிழர் வாழும் நாடுகளில் தமிழ்மொழி புத்துயிர்பெற்று வளர, எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

நாடுகள் தோறும் பாடப் பயிற்சி நூல்களிற் கற்பித்தல் திறனை மேம்படுத்த, ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளை ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

படிமுறைத்தமிழ் ஒன்றியம், அரசியல் கலப்பற்ற, தமிழ்மொழி வளர்ச்சியை மட்டுமே நோக்காகக் கொண்ட ஓர் அமைப்பாகும். உலகரீதியான இவ்வமைப்பில் இணைந்து, இதன் வளர்ச்சியைப் பரவலடையச் செய்வது அனைவரதும் கடமையாகும். இதன்பொருட்டு, உங்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

**"தமிழின் வாழ்வே தமிழரின் வாழ்வு!"**

**அன்புடன்**

**சுப்பிரமணியம் இராசரத்தினம்.**
31 மே 2026

www.padimuraitamil.com

படிமுறைத்தமிழ் ஒன்றியம்
PADIMURAI TAMIL FEDERATION
2370 Midland Avenue #A8, Scarborough, Ontario, M1S 5C6
416-869-8252 | 416-821-5773 | Email: info@padimuraitamil.com

# Padimurai Services

Padimurai Tamil Organization is an institution that unites organizations across the world that tirelessly work toward ensuring that the next generation learns and excels in the Tamil language and identity them as individuals who live by and uphold the Tamil culture and traditions.

This organization primarily functions with the goal of taking the teaching methodology developed on the foundation of "Padimurai Tamil" to various parts of the world.

Furthermore, one of our key objectives is to recognize and honour scholars who conduct research in fields such as the Tamil language, Tamil culture, and Tamil history, as well as those who excel in Tamil arts — literature, music, and drama — while also teaching these disciples to the next generation and nurturing tomorrows leaders in our community.

It is also our social responsibility to recognize teachers across countries who dedicate their invaluable time and service the Tamil community through Tamil language teaching and education.
Another important aspect of our work is identifying solutions to the challenges faced in Tamil language learning and teaching across countries through seminars, discussions, and training programs.

We continue to conduct "Applied Linguistics" classes to help teachers and aspiring educators gain strong knowledge in Tamil linguistics and develop into highly skilled individuals.

In countries where Tamils have lost connection with the Tamil language, we continue to undertake every possible effort to revive and help Tamil flourish once again and for generations to come.

To improve the effectiveness of teaching through structured educational materials and training manuals across countries, we continue to organize annual teacher training workshops.

Padimurai Tamil Organization is a non-profit institution dedicated solely to the growth and development of the Tamil language.

It is the responsibility of everyone to join this global organization and help expand and strengthen its growth worldwide. We warmly invite you to become part of this mission.

Thank you.
Sincerely,

Subramaniam Rasarathinam
Founder of Padimurai Tamil

www.padimuraitamil.com

# படிமுறைத்தமிழ்

## நோக்கங்களும் பயன்களும்

### முன்னுரை

புலம்பெயர்ந்து வாழும் தமிழர் குடும்பங்களில் இன்று நடக்கும் ஒரு நிகழ்வை நாம் அனைவரும் அறிவோம். பெற்றோர் தமிழில் கேட்கிறார்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் பதில் சொல்கிறார்கள். இந்த இடைவெளி ஒரே ஒரு தலைமுறையில் உருவானது ஆனால் கவனிக்காமல் விட்டால், அடுத்த கலைமுறையில் அது திருத்த முடியாத ஒன்றாகிவிடும்.

இந்தத் தேவையை உணர்ந்தவர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள். புலம்பெயர் தமிழ்ச் சமூகங்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த அவர்கள், தமிழ்மொழியின் கட்டமைப்பையும் மொழியியல் இயல்பையும் அடிப்படையாகக்கொண்டு “படிமுறைத்தமிழ்” என்னும் கற்பித்தல் மற்றும் கற்றல் முறையை உருவாக்கினார்கள். இக்கட்டுரை அந்த முறைமையின் நோக்கங்களையும் கட்டமைப்பையும், பயன்களையும் விரிவாக ஆராய்கிறது.

### தமிழ்மொழியின் இயல்பும் கற்பித்தல் சவாலும்

படிமுறைத் தமிழை புரிந்துகொள்வதற்கு முன்னர், தமிழ்மொழியின் இயல்பை சற்று நோக்குவது அவசியம்.

தமிழ் ஒரு ஒட்டுமொழி. அதாவது, சிறுசிறு அலகுகள் ஒட்டி ஒட்டி சொற்களாகவும், சொற்கள் இணைந்து தொடர்களாகவும் படிப்படியாக கட்டமைக்கப்படுகின்றன. “வீட்டிலிருந்து” என்னும் ஒரே சொல், “வீடு + இல் + இருந்து” என்ற மூன்று அலகுகளின் இணைப்பால் உருவாகிறது. இந்த இயல்பை புரிந்துகொள்ளாமல் தமிழைக் கற்கும் ஒருவருக்கு, சொல்லின் அமைப்பு எப்போதும் புதிரானதாகவே தோன்றும்.

இந்தச் சவால், புலம்பெயர்ந்த சூழலில் வளரும் மாணவர்களுக்கு இன்னும் கூடுதலாகிறது. அவர்களுக்கு தமிழ் ஒரு இரண்டாம் மொழி. அவர்களின் சிந்தனை ஆங்கிலத்தில் நடைபெறுகிறது. வீட்டிலும், வெளியிலும் கேட்கும் மொழி ஆங்கிலம். பள்ளியில் கற்பதும் ஆங்கிலமே. இந்தச் சூழலில் தமிழை கற்பிக்கும்போது வேறொரு அணுகுமுறை தேவை என்பதை உணர்ந்தே படிமுறைத்தமிழ் உருவாக்கப்பட்டது.

நாம் பலரும் தமிழைக் கற்றது பாரம்பரிய இலக்கண முறையில். இலக்கண விதிகளை மனப்பாடம் செய்தோம், பரீட்சையில் தோன்றினோம். ஆயினும், அந்த முறையில் கற்ற எம்மில் பலரால் இன்றும் முழுமையான நம்பிக்கையோடு தமிழில் பேசுவதோ எழுதுவதோ சவாலாக இருக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஏனென்றால், விதிகளை மட்டும் கற்றோம் மொழி எவ்வாறு இயங்குகிறது என்பதை புரிந்துகொள்ளவில்லை. படிமுறைத்தமிழ் இந்த வேறுபாட்டை மையமாகக்கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

### படிமுறைத்தமிழ் முறைமையின் நோக்கங்கள் ஒலியிலிருந்து தொடங்குவது ஏன்?

படிமுறைத்தமிழ் மொழியை ஒலியிலிருந்து தொடங்கிக் கற்பிக்கிறது. இது வெறும் உத்தியல்ல மொழியின் இயல்பிலிருந்து வரும் ஒரு முடிவு.

ஒரு மாணவன் “ழ்” என்னும் ஒலியை சரியாக உச்சரிக்க வேண்டும் என்றால், அந்த ஒலி வாயில் எங்கிருந்து பிறக்கிறது என்பதனைப் புரிந்துகொள்வது அவசியம். அது ஆங்கிலத்திலோ பிற மொழிகளிலோ இல்லாத ஒலி. “ண்”, “ன்”, “ந்” என்னும் மூன்று ஒலிகளின் வேறுபாடும் ஒலியியல் அடிப்படையில் கற்பிக்கும்போது மாணவனின் மனதில் நிரந்தரமாக பதிகிறது. இந்த ஒலிகளைக் கற்ற மாணவன், அடுத்ததாக அசைகளைக் கற்கிறான். அசை அமைப்பை புரிந்துகொண்ட மாணவனால் முன்பு பார்த்திராத சொல்லையும் சுயமாக படிக்க முடியும். அந்தத் திறனை வளர்ப்பதே படிமுறைத் தமிழின் முதன்மையான நோக்கம். விதிகளை அல்ல, இயல்பை புரியவைப்பது



வலிமிகல், வலிமிகாமல், குற்றியலுகரம், மயங்கும் மயங்காத ஒலிகள் என்பவை பலருக்கும் தனித்தனி மனப்பாட விதிகளாகவே தோன்றும். ஆனால் இவை, மொழியின் ஒலி இயல்பிலிருந்து வருகின்ற இயற்கையான நிகழ்வுகள். அந்த இயல்பை புரிந்துகொண்ட மாணவன் விதியை மட்டும் பயன்படுத்தி எழுதுவதில்லை; மொழியை உணர்ந்து எழுதுகிறான். அதனாலேயே எழுத்துப்பிழைகள் குறைகின்றன; கற்றது நீடித்து நிற்கிறது.

இதேபோல், தமிழின் தொடர் அமைப்பு ஆங்கிலத்திலிருந்து வேறுபட்டது. ஆங்கில சூழலில் வளரும் மாணவர்களுக்கு இந்த வேறுபாடு ஒரு முக்கியமான தடையாக நிற்கும். படிமுறைத்தமிழ் இந்த வேறுபாட்டை படிப்படியான தொடர் பயிற்சிகள் வழியாக இயல்பாக உள்வாங்கச் செய்கிறது.

## முன்அறிவு தேவையில்லை; நிலைகளுக்கேற்ப கற்பித்தல்

படிமுறைத்தமிழ் எல்லா மாணவர்களையும் ஒரே நிலையில் வைத்துப் பார்ப்பதில்லை. தமிழை முற்றிலும் அறியாதவர்கள் முதல் ஓரளவு அறிந்தவர்கள் வரை, மொழித் திறனுக்கேற்ப வகைப்படுத்தி, ஒவ்வொருவரின் இடத்திலிருந்தே கற்றல் தொடங்குகிறது. முன்அறிவு எதுவும் தேவையில்லை என்பது வெறும் வார்த்தையல்ல; இம்முறைமையின் மிக அடிப்படையான நிலைப்பாடு.

## மொழி மட்டுமல்ல, அடையாளமும்

படிமுறைத் தமிழின் நோக்கம் வெறும் மொழித் திறன் வளர்ப்பு மட்டுமல்ல. மொழி என்பது ஒரு சமூகத்தின் வரலாறு, பண்பாடு, மதிப்பீடுகள் அனைத்தையும் தன்னுள் கொண்டது. தமிழைக் கற்ற மாணவன் திருக்குறளை அணுகுகிறான்; தன் வேர்களைத் தேடுகிறான்; தன் குடும்பத்தோடு, சமூகத்தோடு உயிரான தொடர்பை மீண்டும் உருவாக்கிக்கொள்கிறான். “தமிழ்மொழியே நமது அடையாளம், தமிழர் மரபே எமக்கு வழிகாட்டி” என்னும் இந்த முறைமையின் நம்பிக்கை, மொழிக்கல்வியை ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சியின் செயலாக மாற்றுகிறது.

## முறைமையின் கட்டமைப்பு

படிமுறைத்தமிழ் மொத்தம் பத்து வளர்நிலைகளாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இளம்மழலை முதல் எட்டாம் வகுப்பு வரையிலான பள்ளி வருடங்களுக்கு ஏற்ப இந்த நிலைகள் அமைந்திருக்கின்றன. ஆனால் இந்த வளர்நிலைகளுக்குப் பின்னால் வெறும் வகுப்பு வாரியான பிரிவு மட்டுமில்லை மொழி கற்றல் எவ்வாறு படிப்படியாக நடைபெற வேண்டும் என்னும் தெளிவான மொழியியல் சிந்தனைமுறை இருக்கிறது.

### வளர்நிலை 1 – 3 (Junior Kindergarten, Senior Kindergarten, Grade 1): கேட்பதிலிருந்து உணர்வது வரை

குழந்தை ஒரு மொழியை எவ்வாறு கற்கிறது என்று சிந்தித்தால், அது முதலில் கேட்கிறது; பின்னர் பேசுகிறது; அதன்பின் படிக்கிறது; இறுதியில் எழுதுகிறது. படிமுறைத்தமிழ் இந்த இயற்கையான வரிசையை முதல் மூன்று வளர்நிலைகளில் பின்பற்றுகிறது.

இந்த நிலைகளில் மாணவர்கள் பாடல்கள் பாடுகிறார்கள், கதைகள் கேட்கிறார்கள், கதைகள் சொல்கிறார்கள். பொருட்களைப் பற்றியும், செயல்களைப் பற்றியும் பேசுகிறார்கள். இவை வெறும் வகுப்பறை செயல்பாடுகளல்ல; இவற்றின் வழியாக மாணவன் தமிழ் ஒலிகளை இயல்பாகக் கேட்கவும், உணரவும் பழகுகிறான். பாடல்களில் திரும்பத் திரும்ப வரும் அசைகள் காதில் பதிகின்றன; கதைகளில் வரும் சொற்கள் சூழலோடு புரிகின்றன; பேச்சில் வரும் ஒலிகள் வாயில் உருவாகின்றன. ஒலிகளை அடையாளம் காண்பதும், கற்பதும் இந்த நிலையின் மையம். இந்த அடித்தளம் உறுதியானால் மட்டுமே மேலே கட்டுவது சாத்தியமாகிறது.

### வளர்நிலை 4 – 6 (Grade 2, Grade 3, Grade 4): அசைகளிலிருந்து சொற்கள் வரை

முதல் மூன்று வளர்நிலைகளில் ஒலிகளை உணர்ந்த மாணவன், நான்காம் வளர்நிலையிலிருந்து அசைகளை முறையாக கற்கத் தொடங்குகிறான். தமிழில் சொற்கள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன என்னும் புரிதல் இந்த நிலைகளில் உருவாகிறது.

ஒரு மாணவன் அசை அமைப்பை புரிந்துகொண்டால், அவனால் புதிய சொற்களை சுயமாகப் படிக்க முடியும். கற்றுக்கொடுத்த சொற்களை மட்டும் படிக்கும் நிலையிலிருந்து, எந்தத் தமிழ் சொல்லையும் படிக்கும் நிலைக்கு அவன் உயர்கிறான். இந்தத் திறன் ஒருமுறை உருவானால் சொல்வளம் இயல்பாகவே வளரத் தொடங்குகிறது. அதனாலேயே இந்த நிலைகளில் சொற்களஞ்சியம் மற்றும் மொழி ஆற்றல் என்னும் கூடுதல் நூல்கள் இணைக்கப்படுகின்றன. அசை அமைப்பை அறிந்த மாணவனுக்கு இப்போது அதிகமான சொற்களை சந்திக்கும் வாய்ப்பும் அவற்றை பயன்படுத்தும் வாய்ப்பும் தேவை. அந்தத் தேவைக்கேற்பவே முறைமை தன்னை விரிவுபடுத்திக்கொள்கிறது.

### வளர்நிலை 7 – 8 (Grade 5, Grade 6): மொழியை ஆள்வது

அசைகளும், சொற்களும் தெரிந்த மாணவனுக்கு அடுத்த கேள்வி எழுகிறது: இந்தச் சொற்களை சரியான இடங்களில், சரியான வடிவில் எவ்வாறு பயன்படுத்துவது? இந்தக் கேள்விக்கு பதில் சொல்வதே ஏழாம் மற்றும் எட்டாம் வளர்நிலைகளின் நோக்கம்.

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் சொல்வகைகளும், வேற்றுமை உருபுகளின் செயல்பாடும் இந்த நிலைகளில் மொழியியல் நோக்கில் கற்பிக்கப்படுகின்றன. “ஏன் இப்படி எழுதுகிறோம்?” என்று மாணவன் கேட்கும்போது “அப்படித்தான் இருக்கும்” என்று சொல்வதற்குப் பதிலாக, காரணத்தோடு விளக்கும் திறன் இந்த நிலையில் மாணவனிடம் உருவாகிறது. சொற்களஞ்சியமும், மொழி ஆற்றலும் இந்த நிலையிலும் தொடர்கின்றன; ஏனென்றால் சொல்வளம் வளர்வது ஒருபோதும் நிறுத்தப்படுவதில்லை. இந்த நிலைகளில் மாணவன் மொழியை கற்பதிலிருந்து மொழியை ஆள்வதற்கு நகர்கிறான்.

### வளர்நிலை 9 – 10 (Grade 7, Grade 8): மொழியில் முழுமையாக வெளிப்படுவது

பயணத்தின் இறுதி இரண்டு வளர்நிலைகளில் கற்றல் ஒரு முதிர்ச்சிக்கு வருகிறது. கற்ற அனைத்தையும் ஒருங்கிணைத்து, முழுமையான தொடர்களையும், கட்டுரைகளையும் ஆக்கும் திறனை மாணவன் வளர்க்கிறான். தன் கருத்துகளை தமிழ் எழுத்தில் வடிக்கும் ஆற்றல் இந்த நிலையில் உறுதிப்படுகிறது.

இந்த நிலைகளில் தனி நூல்களாக இருந்த சொற்களஞ்சியமும், மொழி ஆற்றலும் இல்லாமல், அந்தத் திறன்கள் பாடநூலிலும், பயிற்சிநூலிலும் இயைந்து செல்கின்றன. இது ஒரு தெளிவான செய்தி – இந்த நிலையில் வந்த மாணவன் சொல்வளத்தையும், மொழி ஆற்றலையும் தனியாகக் கற்கவேண்டிய அவசியமில்லாமல், அவற்றை இயல்பாக பயன்படுத்தும் நிலைக்கு வந்திருக்கிறான்.

இளம்மழலையில் பாடல் பாடியும், கதை கேட்டும் தொடங்கிய பயணம், வகுப்பு 8-இல் சுயமாக கட்டுரை எழுதும் நிலையில் நிறைவடைகிறது. இந்த எட்டு வருட பயணம் தற்செயலாக வடிவமைக்கப்பட்டதல்ல; மொழி கற்றல் எவ்வாறு நிகழ்கிறது என்னும் ஆழமான புரிதலிலிருந்து வந்தது.

## படிமுறைத்தமிழ் முறைமயின் பயன்கள்

படிமுறைத் தமிழின் பயன்களை பேசும்போது, ஒன்றை முதலில் தெளிவுபடுத்துவது அவசியம். இம்முறைமை மொழியியல் அடிப்படையில் சரியான வழியில் கற்கும்போது இயல்பாக வரும் பலன்களை வழங்குகிறது.

மிக முக்கியமான பயன் என்னவென்றால், ஒலி அமைப்பை புரிந்துகொண்ட மாணவனால் புதிய சொற்களை சுயமாகப் படிக்க முடியும். கற்றுக்கொடுத்த சொற்களை மட்டும் படிக்கும் நிலையிலிருந்து, எந்தத் தமிழ் சொல்லையும் படிக்கும் நிலைக்கு அவன் உயர்கிறான். இந்தத் திறன் ஒருமுறை உருவானால் மொழி கற்றல் தன்னிச்சையாகத் தொடர்கிறது. இதுவே படிமுறைத் தமிழின் மிகப்பெரிய பங்களிப்பு.

மனப்பாடச் சுமை குறைவதால் கற்றல் ஒரு சுமையாகத் தோன்றுவதில்லை. விதிகளை மனப்பாடம் செய்து, சோதனையில் எழுதி, வகுப்பு முடிந்ததும் மறந்துவிடும் அனுபவம் பலருக்கும் தெரியும். மொழியின் இயல்பை புரிந்துகொண்டு கற்கும்போது அந்த மறதி குறைகிறது கற்றது நிலைத்து நிற்கிறது.

மூன்று வயது குழந்தை முதல் வயது முதிர்ந்த பெரியவர் வரை இம்முறையில் கற்கலாம் என்பது உலகெங்கும் நடைமுறையில் நிரூபிக்கப்பட்ட உண்மை. குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் கற்பிக்கும் விதம் வேறுபடும்; ஆனால் மொழியின் இயல்பிலிருந்து தொடங்கும் அடிப்படை அணுகுமுறை மாறுவதில்லை.

புலம்பெயர்ந்த பல நாடுகளில் தமிழ்ப் பள்ளிகள் அந்தந்த நாட்டின் கல்வி அமைப்போடு இணைந்து செயல்படுகின்றன. படிமுறைத்தமிழ் கற்றல் முறைமை, அந்தந்த நாட்டின் கல்வி கட்டமைப்பிற்கேற்ப தமிழை ஒரு முறையான பாடமாக அங்கீகரிக்கப்பட உதவுகிறது. இது மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தமிழ் கற்பதில் கூடுதல் ஊக்கம் தருகிறது.

## கற்றல் முறைமையும் ஆசிரியர் பயிற்சியும்

இங்கே ஒரு தெளிவுபடுத்தல் அவசியம். படிமுறைத்தமிழ் முறைமையில் இரண்டு தனித்தனியான, ஆனால் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய கூறுகள் உள்ளன. ஒன்று, மாணவர்களுக்கான கற்பித்தல் மற்றும் கற்றல் முறைமை மற்றொன்று, ஆசிரியர்களுக்கான பயனாக்க மொழியியல் பட்டயப்படிப்பு.

இக்கட்டுரை விவரிப்பது மாணவர்கைள மையமாகக்கொண்ட கற்றல் முறைமையை. ஆசிரியர்களுக்கான பட்டயப்படிப்பு, இந்தக் கற்றல் முறைமையை மொழியியல் அறிவுடன் கையாளும் திறனை வழங்குகிறது. தமிழை அறிந்திருப்பதற்கும் தமிழை சிறப்பாகக் கற்பிக்கத் தெரிந்திருப்பதற்கும் இடையே உள்ள இடைவெளியை அந்தப் பட்டயப்படிப்பு நிரப்புகிறது. இரண்டும் சேர்ந்தே படிமுறைத்தமிழ் முறைமையை முழுமையாக்குகின்றன.

## முடிவுரை

படிமுறைத்தமிழ் கற்பித்தல் மற்றும் கற்றல் முறைமை, தமிழ்மொழியின் இயல்பை புரிந்துகொண்டு, அந்தப் புரிதலை இளம்மழலை முதல் எட்டாம் வகுப்பு வரையிலான பத்து வளர்நிலைகளாக வடிவமைத்த ஒரு முறையான முயற்சி. பாடல் பாடியும், கதை சொல்லியும் தொடங்கும் ஒரு குழந்தை, படிப்படியாக அசைகைளயும், சொற்களையும் கற்று, இறுதியில் தன் கருத்துகளை தமிழில் எழுத்தில் வடிக்கும் நிலைக்கு உயர்கிறான். இந்தப் பயணம் தற்செயலானதல்ல; மொழி கற்றல் எவ்வாறு நிகழ்கிறது என்னும் தெளிவான புரிதலிலிருந்து வந்தது.

இன்று உலகெங்கும் - கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா, ஃபிஜி, ஐரோப்பா என பரவியிருக்கும் இந்த முறைமை, புலம்பெயர் தமிழ்ச் சமூகங்கள் எங்கிருந்தாலும் தங்கள் பிள்ளைகளுக்குத் தரமான தமிழ்க்கல்வி வழங்க முடியும் என்னும் நம்பிக்கையை உண்மையாக்கியிருக்கிறது. ஒவ்வொரு வாரமும் ஒரு குழந்தை தமிழ் வகுப்பிற்குச் செல்கிறது என்றால், அது ஒரு இணைப்பை காப்பாற்றுகிறது. குழந்தைக்கும் அதன் வேர்களுக்கும் இடையேயான இணைப்பை, நாளை அந்தக் குழந்தை தமிழில் எழுதும்போதும் படிக்கும்போதும், “என் மொழி எனக்குத் தெரியும்” என்று சொல்லும்போதும் அந்தத் தருணம் இந்த முறைமையின் மிகப்பெரிய வெற்றி.

**படிமுறைத்தமிழ்**
www.padimuraitamil.com

HOUSE OF COMMONS
CHAMBRE DES COMMUNES
CANADA

*Gary Anandasangaree*
Member of Parliament
Scarborough—Guildwood—Rouge Park



May 31, 2026

**Greetings from The Honourable Gary Anandasangaree**

**Member of Parliament for Scarborough—Guildwood—Rouge Park**

It is a pleasure to extend my warmest greetings to everyone attending the Padimurai Tamil Federation Gala 2026.

This event is a meaningful opportunity to celebrate the individuals, educators, and organizations working to ensure future generations remain connected to their heritage and traditions.

I commend the Padimurai Tamil Federation and the Canadian Tamil Sangam for their continued dedication to supporting Tamil language education and creating opportunities for young people to learn, grow, and stay connected to their cultural roots. Your efforts are a testament to the hard work, vision, and leadership your organization brings to the community.

Canada's diversity is one of our greatest strengths, and the contributions of Tamil Canadians continue to enrich our country in countless ways. By supporting language, education, and cultural learning, you are helping build stronger and more connected communities for generations to come.

Please accept my best wishes for a memorable and successful evening.

Yours very truly,

The Honourable Gary Anandasangaree, PC, KC, MP
*Member of Parliament*
*Scarborough—Guildwood—Rouge Park*

*Ottawa*

Room 706, Justice Building
Ottawa, Ontario, K1A 0A6
613-992-1351
Gary.Anand@parl.gc.ca

*Constituency Office*

3600 Ellesmere Road-Unit 3
Scarborough, Ontario, M1C 4Y8
416-283-1414
Gary.Anandasangaree.C1@parl.gc.ca




May 25, 2026

**A Personal Greeting**

*from*

**Member of Provincial Parliament, Logan Kanapathi**

On behalf of the Legislative Assembly of Ontario, it is my great pleasure to extend my warmest greetings to the Padimurai Tamil Federation and all attendees on the occasion of the *Padimurai Tamil Federation Gala 2026.*

This special event proudly celebrates the Tamil language, one of the world's oldest and most remarkable living languages and reflects the community's deep commitment to preserving its heritage for future generations. The dedication shown by your organization ensures that Tamil language, culture, and identity continue to thrive with strength and pride across Ontario and beyond.

I commend the Padimurai Tamil Federation for its exceptional leadership in advancing Tamil education through the innovative Padimurai teaching method. Your work is not only shaping academic success but also inspiring a new generation to embrace their roots with confidence, pride, and a strong sense of identity.

I extend my sincere appreciation to the organizers, educators, volunteers, and families whose commitment makes this important work possible. Please accept my best wishes for a successful, inspiring, and memorable evening.

Sincerely,



**Logan Kanapathi**
**Member of Provincial Parliament, Markham-Thornhill**
**Parliamentary Assistant to the Minister of Red Tape Reduction**

CONSTITUENCY OFFICE | 7380 McCowan RD. UNIT #3, MARKHAM ON L3S 3H8 TEL: 905-305-1935 | logan.kanapathico@pc.ola.org

## 5 வருடகாலமாகப் படிமுறைத்தமிழோடு இணைந்து ஆசிரியர் பணியை மேற்கொண்டுவரும் ஆசிரியப் பெருந்தகைகளைப் பாராட்டி, வாழ்த்திக் கௌரவிப்பதில் படிமுறைத்தமிழ் ஒன்றியம் பெருமகிழ்ச்சியடைகின்றது



மகிழினி
மகேந்திரன்



உருத்ஷாயிகா
உருத்திரநாதன்



கிருஷ்ணவி
சிவபாலன்




மதுரா
கிருபாகரன்



துஷியந்தி
மக்கீலன்ஸ்



கோமதி
சிவகுமாரன்



மதீசா
மக்கீலன்ஸ்



ராஜரூபினி
அகிலன்



ஸ்டெல்லா
ஞானசேகரம்



சயந்தா
பாஸ்கரன்



பிருந்தா
பாஸ்கரன்



தினேஷ்
குகானந்தா

# 2023ம் ஆண்டு படிமுறைத் தமிழில் ஐந்து வருடகால ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்தமைக்கான விருதினைப்பெற்று எம்மோடு இன்று வரை ஆக்கபூர்வமாகப் பணியாற்றி வரும் ஆசிரியர்களின் மகத்தான சேைவயினை இச்சந்தர்ப்பத்தில் படிமுறைத்தமிழ் ஒன்றியம் அனைவரையும் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றது



துஷ்யந்தி
குணரட்ணம்




சுபோதினி
தனஹந்தன்



சுசீலா
சந்திரகாந்தன்



ஞானேஸ்வரி
பாஸ்கரன்



குமுதா
பீட்டர்


## 10 வருடகாலமாக படிமுறைத்தமிழ் அமைப்போடு ஒன்றிணைந்து தமது மகத்தான பணியினை, ஆத்மார்த்தமாகச் செய்து வரும் ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி, வாழ்த்தி கௌரவப்படுத்துவதில் படிமுறைத்தமிழ் ஒன்றியம் பெருமை கொள்கின்றது



உமா
சூரியகுமார்



சிந்துஜா
தவராசமித்திரன்



சந்திரமோகன்
செல்வரத்தினம்



சாந்தினி
ஞானரத்தினம்



சிவஞானவதி
கேசவதாஸ்



தமிழ்மதி
சிவகுமார்



மஜந்தா
மகிந்தன்



சசிகுமார்
கதிர்காமு



இராஜேஸ்வரி
உருத்திரநாதன்



சந்திரவதனி
சிவபாலன்




படிமுறைத்தமிழ் ஒன்றியம்

**திரு. சசிகிருஸ்ணா கதிர்காமு**

அவர்களது சிறப்பு மிக்க சேவையினைப் பாராட்டி,
பெருமையுடன் அவர் தமக்கு

**"கல்வி நெறிமுறைப் பேரொளி"**

என்ற விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.



செம்மண் வளமும் விவசாயச் செழிப்பும் நிறை உழைப்பையே மூலதனமாகக் கொண்ட வீரமிகு ஊராம் உரும்பிராய் மண்ணில் பிறந்த மைந்தன். ஆன்மீகத்தைத் திளைக்க வைக்க விரும்பிப் பெற்றோர் அனுப்பி வைத்த பிள்ளை இவன். கோப்பாய் கிருஷ்ணர் கோவிலில் நேர்த்திவைத்து பிறந்தவன் என்பதால் இயல்பிலேயே கிருஷ்ணரில் வாலாயம் கொண்டிருந்தது. வேடிக்கை இல்லை.

1990 காலப்பகுதியில் மொன்றியல் ஹரே கிருஷ்ணா ஆலயத்தில் வழிபாட்டில் இணைந்து, காலப் போக்கில் அங்கே வரும் பக்தர்களுக்குப் பகவத்கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற நூல்களுக்கு விளக்கம் அளித்தவர். ஆரம்பத்தில் இருந்து சமயப் புத்தகங்களைத் தேடித் தேடிப் படிக்கும் ஆற்றல் நிறைந்தவர். பகவான் கிருஷ்ணர் மேல் பக்தியை வைத்திருப்பது திடீரென அமைந்த ஒன்றல்ல!! அது பூர்வஜென்ம பந்தம் என்று தான் சொல்ல வேண்டும்.

ரொரன்ரோவில் 1992ம் ஆண்டு ஜகத்குரு ஸ்ரீ கிரிபாலு மகாபிரபு அவர்களின் சிசியையான பிரஜ் பன்சரி டிடிஜி அவர்களைச் சந்தித்தார். அவரினூடாக கிரிபாலு மகாபிரபுவின் போதனைகளை ஏற்றுநடந்து அவரைத் தனது குருவாக ஏற்று கிருஷ்ண பக்தியைப் பயிற்சி செய்துவருகின்றார். டிடிஜி அவர்கள் இவரைப் பிள்ளைபோலப் பேணி ஆன்மீகப் பயிற்சிகொடுத்து வளர்த்து வந்தார். அவரின் வார்த்தையைச் சிரமேற்கொண்டே திருமணஞ்செய்யாது கிருஷ்ணபக்தியைத் தொடர்கின்றார்

பேராசான் திரு. இராசரத்தினம் சுப்பிரமணியம் அவர்களின் படிமுறைத் தமிழ் பற்றிக் கேள்வியுற்று முதன் முதலில் மொன்றியலில் இருந்து அவரது பயிற்சிப் பட்டறையில் இணைந்து கொண்ட முதல் மாணவன் என்ற பெருமையைப் பெற்றுக் கொள்பவரும் இவரே. பேராசானின் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளுக்குத் தகுந்த முறையில் ஆதார பூர்வமான பதிலைத் தந்திட்ட படிமுறைத் தமிழ் விளக்கங்களை நுணுக்கமாய் ஆராய்ந்தறிந்து, அதில் ஊறிப் போன ஒருவனாக

திரு. சசிகிருஷ்ணா இருந்து வந்தார். தொடர்ந்து தான் செயலாளராக இருந்து கட்டிக் காத்து வரும் ஆத்மஜோதிப் பாடசாலை ஆசிரியர் அனைவரையும் படிமுறைத் தமிழைக் கற்றுத் தேர்ந்திட வைக்கப் பெரும் உந்துகோலாக இருந்திருந்தார். என்றுமே ஒரு நல்ல ஆசிரியருக்கு அழகு தொடர்ந்தும் அவர்கள் கற்றுக் கொண்டிருப்பதே என்ற கருத்தை எடுத்தியம்பியவர். இளம் தலைமுறை ஆசிரியர்கள் பலரையும் இந்தக் கற்கை நெறிக்குள் புகுத்திப் பேராசானின் பெரும் பாராட்டினையும் பெற்றுக் கொண்டவர்.

பேராசானின் வகுப்புகள் ஒன்றையும் தவறவிடாமல், ஒவ்வொரு நொடிப் பொழுதினதும் பெறுமதி அறிந்து அவற்றைப் பக்குவமாய்ப் பாவிக்கத் தெரிந்த செயல் வீரன் சசிகிருஷ்ணா அவர்கள் என்றால் அதுவே சாலச் சிறந்தது எனலாம். தனது பாடசாலை ஆசிரியர்களுக்கு மொழியறிவு சம்பந்தமாகவும் இலக்கணங்கள் சம்பந்தட்ட சந்தேகங்களைத் தீர்த்து வைக்கும் ஒரு ஆத்மார்த்த தொண்டன் என்றும் சொல்லலாம். புலம்பெயர் தேசங்களில் பிறந்து தமிழ்மொழி தன்னை இரண்டாம் மொழியாகக் கொண்ட சிறார்களின் மொழிப் பசியைத் தீர்க்கும் வல்லமை கொண்டவர்.

பல இளங்கலைஞர்களை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடகங்களை மாணவர்களுக்காக இவர் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகாபாரதப் போரினில் வந்த பார்த்தசாரதி போல் இவரும் எங்கள் தமிழ்ப் பாடசாலை தன்னைத் தன் கண்களுக்குள் பொத்தி வைத்துக் காத்திடும் இன்றைய பார்த்தசாரதி இவர் என்பதில் ஐயமில்லை. மேலும் இவரது சேவைகள் இன்னும் பலகாலம் தொடரட்டும் என்று வாழ்த்துக் கூறுகிறோம்.




படிமுறைத்தமிழ் ஒன்றியம்

**திருமதி விஜயலட்சுமி ஸ்ரீநிவாசகம்**

*அவர்களது சிறப்பு மிக்க சேவையினைப் பாராட்டி,*
*பெருமையுடன் அவர் தமக்கு*

## "இசைத்தமிழ்ப் பேரொளி"

*என்ற விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.*



திருமதி விஜயலக்சுமி ஸ்ரீநிவாசகம் அவர்கள் இசைக் குடும்பத்தில் பிறந்தவர். தனது ஆரம்பகால இசைப் பயிற்சியை தனது அண்ணன் திரு. அ. சிவசாமி அவர்களிடமிருந்து குரல் இசை மற்றும் வயலின் ஆகிய இரண்டையும் கற்றார். பின்னர் இலங்கையின் யாழ்ப்பாணம் இராமநாதன் இசைக் கல்லூரியில் திரு. சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை அவர்களிடமும் மேம்பட்ட பயிற்சி பெற்றார்.

அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் தொலைக்காட்சியில் செயற்பாடுமிக்க கலைஞராக விளங்கினார். கனடாவின் டொரொன்ரோவில் நிறுவப்பட்ட "நாதாலயா" (இனிய இசையின் ஆலயம்) என்ற கர்நாடக இசைப் பாடசாலையின் நிறுவுநரும், இயக்குநருமாவார். இப்பாடசாலை 2013 ஆம் ஆண்டில் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது.

திருமதி விஜயலக்சுமி அவர்கள் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் பல்வேறு மேடைகளில் குரல் இசை மற்றும் வயலின் கச்சேரிகளின் மூலம் விரிவாக கலைநிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். கர்நாடக இசையின் மீது கொண்ட ஆழ்ந்த ஆர்வம் காரணமாக குமாரி ஏ. கன்னியாகுமாரி மற்றும் திரு. முல்லைவாசல் ஜி. சந்திரமௌலி ஆகியோரிடமிருந்தும் தொடர்ந்து வழிகாட்டுதலைப் பெற்றுவருகிறார்.

ஒட்டாவா தமிழ்ச் சங்கம் அவர்களுக்கு "இசைக்குயில்" என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. மேலும், ஒன்டாரியோ அரசு அவருடைய அர்ப்பணிப்பான கற்பித்தல் மற்றும் கலைப்பணிகளின் மூலம் சமூகத்திற்கு வழங்கிய மதிப்புமிக்க சேவைகளை பாராட்டியுள்ளது. இந்தியாவில் வெளியாகும் "அபூர்வராகம்" இசை மாத இதழ் 2007 ஆம் ஆண்டு அவர்களுக்கு "இசைச் சுடரொளி" என்ற விருதை வழங்கியது.

அவரது சாதனைகளில் பல இசை குறுந்தட்டுகள் (CD) வெளியீடுகளும் அடங்குகின்றன.




படிமுறைத்தமிழ் ஒன்றியம்

**திருமதி நிரோதினி பரராசசிங்கம்**

*அவர்களது சிறப்பு மிக்க சேவையினைப் பாராட்டி,*
*பெருமையுடன் அவர் தமக்கு*

# "ஆடற்கலைப் பேரொளி"

*என்ற விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.*



திருமதி நிரோதினி பரராஜசிங்கம் அவர்கள், Niro Dance Creations மற்றும் Global Tamil Cultural Organization ஆகியவற்றின் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக விளங்குகிறார். அவர் கடந்த 35 ஆண்டுகளாக கனடாவில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் மதிப்பிற்குரிய பரதநாட்டியக் கலைஞர், ஆசிரியர், நடன அமைப்பாளர் மற்றும் பண்பாட்டு கலாசாரத் தலைவராவார்.

Niro Dance Creations அமைப்பின் மூலம் தெனாசியசமூக இளைஞர்களிடையே ஒழுக்கம், பண்பாடு மற்றும் கலை வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறார். கனடாவின் தமிழ் கலை மற்றும் பண்பாட்டுச் சமூகத்தின் மதிப்புமிக்க உறுப்பினராக விளங்கும் அவர், பரதநாட்டியத்தின் மூலம் மாணவர்களிடம் வாழ்க்கைத் திறன்கள், தன்னம்பிக்கை மற்றும் பண்பாட்டு மதிப்புகளை வளர்க்க உறுதுணையாக உள்ளார். இதன் மூலம் மாணவர்கள் நிஜ வாழ்க்கையில் ஒழுக்கமும் முன்னேற்றமும் பெற உதவுகிறார்.

அவரது தலைமையில் Niro Dance Creations பல புகழ்பெற்ற மேடை நாடக மற்றும் நடனத் தயாரிப்புகளை வழங்கியுள்ளது. அவற்றில் Rose is a Rose, Krishna, Yagnaseni, Dasavatharam, Son of the Wind ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மேலும், 2026 ஆம் ஆண்டில் 10வது சிறப்பு தயாரிப்பாக Majestic Yathra அரங்கேற்றப்பட்டது.

கலைத் துறையைத் தாண்டியும், சமூக நல மற்றும் நிதி திரட்டும் பணிகளில் அவர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். குறிப்பாக Canadian Cancer Society மற்றும் SickKids Foundation போன்ற அமைப்புகளுக்கு ஆதரவளித்து, மனிதநேய சேவை மற்றும் சமூக நலனில் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி வருகிறார்.

கலை, பண்பாடு, தலைமைத்துவம் மற்றும் சமூக சேவையில் அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பை பாராட்டி, 2026 ஆம் ஆண்டின் International Women Leadership Award விருதால் கௌரவிக்கப்பட்டார். மேலும், Lieutenant Governor Award, Queen Elizabeth Award மற்றும் King Charles III Coronation Pin உள்ளிட்ட பல முக்கியமான விருதுகளையும் பெற்றுள்ளார்.






படிமுறைத்தமிழ் ஒன்றியம்

**திரு. வடிவேல் தேவராஜ்**

*அவர்களது சிறப்பு மிக்க சேவையினைப் பாராட்டி,*
*பெருமையுடன் அவர் தமக்கு*

**“ஊடகப் பேரொளி”**

*என்ற விருதினை வழங்கிச் சிறப்பிக்கின்றது.*

திரு. வடிவேல் தேவராஜ் அவர்கள் இலங்கையிலும் புலம் பெயர் தமிழர்கள் மத்தியிலும் மிகவும் அறியப்பட்டவராகவும், மதிக்கப்படும் ஊடகவியலாளராகவும் கணிக்கப்படுகின்றார். அவர் ஊடகத்துறைக்குள் நுழைந்ததானது, வெறுமனே அதனை ஒரு தொழிலாக அன்றி, இந்தத் துறை மூலம் தமிழ்பேசும் மக்களுக்கு முடிந்ததைச் செய்யவேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டதாகவே இருந்தது.

மலையகத் தோட்டத்து மகனாகப் பிறந்து, தோட்டத்துறை சார்ந்தோர் முன், இயல்பாகவே மலையென உயர்ந்து நின்ற இடர்களுக்கு முகம் கொடுத்து, சளைக்காது போராடி வெற்றி கண்ட ஒருவர். சமகாலத்தில் கல்விகற்ற பல மலையக இளைஞர் யுவதிகளுக்கு அவர் ஒரு Role Model ஆக இருந்துள்ளார். பதுளை நாராங்கலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர், தோட்டப் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியையும், கந்தேகெதற தமிழ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தரத்திலும் சித்தி பெற்று, பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் சித்தி பெற்று, யாழ் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர், இந்தியாவில் கர்நாடகா மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் தனது முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பண்டாரநாயக்க சர்வதேச கற்கை நெறியில் (PGD) பட்டத்தையும் பெற்றுள்ளார்.

“பல்கலைக் கழக வாழ்வில் கல்வியுடன் பல்வேறு சமூகப் பணிகளிலும், மாணவர் போராட்டங்களிலும், மனித உரிமைப் போராட்டங்களிலும், சமூகப் பணிகளிலும் தம்முடன் இணைந்து ஈடுபட்டுள்ளார்” என, பேராசிரியர் உ. சேரன் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் பல்கலைக் கழக மாணவர் சங்க உறுப்பினராகவும் செயற்பட்ட அவர், அவ்வேளையில் சுன்னாகம் சந்தை எரிப்பு, ஆயுதப் படையினரால் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை போன்ற சம்பவங்களைப் படம் பிடித்து ஆவணப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பொ. ரகுபதியுடன் இணைந்து தொல்லியல் கண்டுபிடிப்புகளிலும் ஈடுபட்டுள்ளார். ஆனைக்கோட்டை கண்டுபிடிப்பும், அகழ்வாராய்ச்சியும் அவற்றுள் பிரசித்தி பெற்றனவாகும். இந்த அகழ்வாராய்ச்சியில் தேவராஜ் கண்டெடுத்த முத்திரை, இலங்கையில் தமிழர்களின் வரலாற்றை 3rd Century B.C.க்கு நகர்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## இதழியல் பணியும் தலைமைத்துவமும்

1987ஆம் ஆண்டு மே முதலாம் திகதி, பழம்பெரும் பத்திரிகையான வீரகேசரியில் இணைந்து கொண்டதன் மூலம், தனது ஊடகப் பயணத்தைத் தொடங்கினார். Deputy Editor பதவிக்கான நேர்முகப் பரீட்சையில் தேர்வு பெற்ற போதும் ‘அனுபவம் இல்லாதவரை உயர்பதவிக்கு நியமிக்கக் கூடாது’ என அவ்வேளையில் ஆசிரியர்பீடத்தில் உள்ளோரால் போர்க்கொடி தூக்கப் பட்டது. இது குறித்து வீரகேசரி நிர்வாகம் தேவராஜுடன் உரையாடிய போது ‘தமக்கு அனுபவம் இல்லை’ என்பதை அவர் ஒத்துக் கொண்டார். அதனை அடுத்து அவர் Assistant Editor – Up-Country என்ற பதவியில் அமர்த்தப்பட்டார்.

எனினும் தேவராஜ் வீரகேசரியில் ஆறு மாதங்கள் தானும் பணியாற்ற மாட்டார் என்ற செய்தி கசியவிடப்பட்டது. ஆறு மாதக் காலக்கெடுவுடன் வீரகேசரிக்குள் நுழைந்த தேவராஜ், அமைதியாகத் தனது பணியினை மேற்கொண்டு சவால்களை முறியடித்து News Editor, Deputy Editor, Associate Editor என, பதவி உயர்த்தப்பட்டு, வீரகேசரி வார இதழ், மித்திரன், மெட்ரோ நியூஸ் ஆகிய பத்திரிகைகளது பிரதம பொறுப்பாசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டார்.

வீரகேசரி வரலாற்றிலேயே இவரது காலத்தில்தான் வீரகேசரி வார இதழ் Circulation ஒரு இலட்சத்து 20 ஆயிரத்தை எட்டியதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகக் குறிப்பொன்று கூறுகின்றது.

இதனை அடுத்து, நிர்வாகத்தின் பணிப்பின் பேரில் மலையகத்திற்கென சூரியகாந்தி, மாணவர்களுக்கென ஜூனியஸ் மெட்ரோ நியூஸ் தினசரி மற்றும் வார வெளியீடு என்ற பத்திரிகைகள் வெளிவர தேவராஜ் காரணமாக இருந்தார். பின்னாளில் ‘நாணயம்’ என்ற வர்த்தகப் பத்திரிகையும் இவரால் வெளிக் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனவே, ஆறு மாத காலக்கெடுவுடன் வீரகேசரிக்குள் நுழைந்த தேவராஜ், சவால்களைக் கடந்து, பிரதம பொறுப்பாசிரியராகப் பொறுப்பேற்று, 28 வருடங்களை நிறைவு செய்துள்ளார். வீரகேசரி வாசகர்களில் பெரும்பாலானவர்கள் ‘வீரகேசரியில் தேவராஜின் வகிபாகம் என்பது 'Golden Period' எனக் குறிப்பிடுகின்றனர்.

தேவராஜ் ஊடகத்துறைக்குள் நுழைந்த காலம், தொடர்ந்து பணியாற்றிய காலம் என்பன ஊடகவியலாளர்களும், ஊடகத்துறையினரும் பெரும் நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்த காலகட்டமாகும். நடுநிலையுடனும், பத்திரிகை தர்மத்திற்கேற்பவும், துணிச்சலுடனும், நேர்மையுடனும் செயலாற்றியமையானது, அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரச இயந்திரத்தாலும், அரசியல் சக்திகளினாலும் இலக்கு வைக்கப்பட்டார்.

இதனால் அவர் இருமுறை நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் பலமுறை TID யினராலும், பொலிசாராலும் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அமெரிக்க தூதரகம், Reporters Without Borders அமைப்பு என்பன தேவராஜின் பாதுகாப்பில் அக்கறை கொண்டு செயற்பட்டன. தேவராஜின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கைப் பிரதமருக்கு Reporters Without Borders அமைப்பு கடிதம் அனுப்பியது.

நேர்மையான ஊடகவியலாளனாக, பக்கச் சார்பின்றி, நடுநிலையுடன், சோரம் போகாது தேவராஜ் தனது ஊடகப் பயணத்தைத் தொடர்ந்தவர். இந்தப் பயணத்தில் அவர் இழந்தவைகள் ஏராளம். அதில் நான்கு முக்கிய விடயங்களை அவர் குறிப்பிடுகின்றார்.


1. தராக்கி சிவராம், நடேசன், நிமலராஜன், சுகிர்தராஜ் சுப்ரமணியம் என அவருடன் இணைந்து பணியாற்றிய ஊடகவியலாளர்களின் இழப்பு.

2. போலித் தமிழத்தேசியவாதிகளினாலும், சக ஊடக நண்பர்களாலும், இந்தியத் தூதரக உயர்மட்டத்தினராலும் அவரது ஊடகப் பயணமே Assassination செய்யப்படுவதற்கு வீரகேசரி நிறுவனமும் செவிசாய்த்துத் துணைபோனமை.

3. அவர் வீரகேசரியில் இருந்து தூக்கப்பட்ட செய்தியை, அவருடைய வீட்டார் மூன்று வருடங்களாக அவருடைய தாய்க்குக் கூறாது மறைத்து வைத்திருந்தனர். இந்தச் செய்தியை இறுதியில் கேள்விப்பட்ட அவருடைய தாய் அதிர்ச்சியில் மரணமான சம்பவம்.

4. தனது ஊடகப் பயணத்தால் தான் வளர்த்த மருமகளின் கல்வியும் எதிர்காலமும் கொழும்பில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலை அதிபராலேயே அழிக்கப்பட்டமை. இவை இன்றும் தன்னில் ஆறா வடுக்களாக உள்ளன என்று அவர் குறிப்பிடுகின்றார்.

அவரது ஊடகத்துறை பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாக, தாயகத்திலும் புலம் பெயர் தேசங்களிலும் உள்ள 25க்கும் மேற்பட்ட அமைப்புகள் அவரைக் கௌரவித்துள்ளன.



# நிகழ்ச்சி நிரல்

01: மங்கல விளக்கேற்றல் – படிமுறைத்தமிழ் அதிபர்கள்

02: கனேடிய தேசியக் கீதம்

03: தமிழ்த்தாய் வாழ்த்து

04: பூர்வீக நில அங்கீகாரம் – திருமதி டொறிஸ் யோ மதனராஜ்

05: வரவேற்புரை – சந்துரு துரைராசா

06: காணொளி – தெற்கு ஆபிரிக்கா

07: வரவேற்பு நடனம்

08: காணொளி – பிஜீ

09: படிமுறைத்தமிழ்க் கீதம்

10: மொறிசியஸ் காணொளி

11: நடனம் – என் தமிழ்மொழி எங்கே

12: காணொளி – படிமுறைத்தமிழ் என்றால் என்ன?

13: உரை – படிமுறைத்தமிழ் நிறுவுநர் சித்தம் அழகியான் இராசரத்தினம்

14: பாடல் – பானுஜன் வசந்தபாலன்

15: விருது – இளைய உதவி ஆசிரியர்

16: நடனம் – “சோறு போடுமா தமிழ்”

17: சிறப்பு விருது வழங்கல் – இயல், இசை, நாடகம், ஆய்வு

18: பாடல் – “செம்மொழியான”

19: ஆசிரியர் விருது வழங்கல் – 5 + ஆண்டு

20: பாடல் – “காற்றே என் வாசல் வந்தாய்”

21: ஆசிரியர் விருது வழங்கல் – 10 + ஆண்டு

22: காணொளி – மியான்மார்

23: இசைச் சங்கமம் – கனடியக் குயில்கள்

24: பாடல் – “செம்மொழியான தமிழ்மொழியாம்”

25: பாடல் – “பொன் வானம் பன்னீர் தூவும்”

26: பாடல் – “நெஞ்சினிலே நெஞ்சினிலே”

27: பாடல் – “அஞ்சலி அஞ்சலி புஸ்பாஞ்சலி”

28: பாடல் – “ஓம் நமசிவாய”

29: பாடல் – “சௌக்கியமா கண்ணே”

30: நன்றியுரை


Golumbia
Blinds & Shutters
Visit Our
Showroom
UP TO
50%
OFF
Free
Consultation
Factory
Direct Price
Installation
Available
Zebra
Roller
Shutters
GOLUMBIA is a Trusted Name with an experience of 100,000 Blinds.
CALL NOW! 647.338.1000
MADE IN CANADA
FABRIQUÉ AU CANADA
5 STAR
Google
REVIEWS
COMPANY


Platinum
CAR & TRUCK RENTAL
Sathees Prasad
Operations Manager
Cell: 416-828-7081
Tel: 416-613-1811
Fax: 416-613-1833
www.platinumcar.ca
rent.platinum@gmail.com
880 Ellesmere Road, Unit #1, Toronto, ON M1P 2W6

# நிகழ்ச்சியில் பங்குபற்றும் கலைஞர்கள்

### கனேடிய தேசியக் கீதம் தமிழ்த்தாய் வாழ்த்து

குறிஞ்சி ஜெயரூபன்
ஷானா அழகேஸ்வரன்
அக்ஷயா சத்தியேந்திரன்
சைந்தவி புஷ்பகரன்
ஆரன் அஜித்குமார்
அர்வின் அஜித்குமார்
பிரணவி தவகுமார்
சகிரா சுகுமாரன்
ஆதிரை சியாம்சுந்தர்
ஆரணி இராஜமோகன்
ஸ்வாதி கேதீஸ்வரன்
ஸ்ருதி கேதீஸ்வரன்
பானுஜன் வசந்தபாலன்
விகாஷனி அருணோதயன்
அஷ்வினா அரூரன்
அக்ஷன்னா அரூரன்
மதீசா மக்கீலன்ஸ்

### வரவேற்பு நடனம்

அபிராமி ஆதிரையன்
திவ்யா தமோதரம்
இலக்ஷனா ரமேஷ்குமார்
இலாவண்யா ரமேஷ்குமார்

நடன அமைப்பு:
திருமதி நிரோதினி பரராஜசிங்கம்
*Niro Dance Creations*





### பாடகர்கள்

இலக்ஷான் கேங்காதரன்
மதுலா சக்திவேல்
சந்தோஷ் குகன்
பானுஜன் வசந்தபாலன்
விகாஷ்னி அருணோதயன்
யாதவி கணேஸ்
ஷானா அழகேஸ்வரன்
ஸ்வாதி கேதீஸ்வரன்
ஸ்ருதி கேதீஸ்வரன்
ஆதிரை சியாம்சுந்தர்
குறிஞ்சி ஜெயரூபன்
அஷ்வினா அரூரன்
அக்ஷன்னா அரூரன்

### இசைச் சங்கமம்: கனடியக் குயில்கள்

பானுஜன் வசந்தபாலன்
விகாஷனி அருணோதயன்
யாதவி கணேஸ்
ஷானா அழகேஸ்வரன்
ஸ்வாதி கேதீஸ்வரன்
ஸ்ருதி கேதீஸ்வரன்
ஆதிரை சியாம்சுந்தர்
குறிஞ்சி ஜெயரூபன்
அஷ்வினா அரூரன்
அக்சன்னா அரூரன்
காசினி கணேஸ்

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு:
திருமதி சௌமியா வாசுதேவன்
திருமதி டொறிஸ் யோ. மதனராஜ்

### நடனம்: என் தமிழ்மொழி எங்கே

சுபோதினி தனஹந்தன்
பிரபா விஜய்
குமுதா பீட்டர்
இஷவிகா செல்வநாதன்
சுமதி பாலராம்
சோபனா ரவி
ரோசி சந்திரகுமார்
ஜெஷானி
கோணேசப்பிள்ளை
டிலானி ராஜீவன்

### நடனம்: ‘சோறு போடுமா தமிழ்’

மாதீசா மக்கியேலன்ஸ்
சுரிதி அதிதன்
இனியா சிவா
ஷானா அழகேஸ்வரன்
ஸ்வாதி கேதீஸ்வரன்
ஸ்ருதி கேதீஸ்வரன்


VISION AUTO CARE INC
• VEHICLE WRAPS
• PAINT PROTECTION FILM
• PAINT CORRECTION
• CERAMIC COATING
• WINDOW TINT
• AUTO DETAILING
416-649-6262
647-203-4778
1211 Kingston Rd, Unit #8,
Pickering, ON L1V 6M5


LANKA METAL
514-533-0250
514-600-2050
kiri@lankametals.com
8401 Ray Lawson,
Anjou, Quebec H1J 1L6


FIND A HOME THAT SUITS Your Lifestyle
THEEPAN KRISHNAPILLAI
SALES REPRESENTATIVE
HOMELIFE
416-984-9436
ktheepan@hotmail.com
Bus: 905-201-9977 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham Ont. L3S 4N8


747 AUTOPARTS
The Right Price; The Right Choice
416-791-0087
info@747autoparts.com
PHONE: (416) 285-4447
WWW.747AUTOPARTS.COM
747 AUTO PARTS-SCARBOROUGH
2300 LAWRENCE AVE EAST UNIT #30
SCARBOROUGH, ON M1P2R2
TOLL FREE #1-866-936-1074
THANK YOU FOR YOUR BUSINESS


MORTGAGE FINANCIAL
NESAN
416-908-5656
Off : 416-660-5656 | Fax : 647-351-3099
Toll Free : 1-844-878-2721
Mortgage@subra.com
www.Subra.com
1585 Markham Rd, Unit #406,
Toronto, ON M1B 2W1, Canada
Mortgage Agent Licence # M15001465
Brokerage # 10330
MORTGAGE ALLIANCE

உலகம் தழுவி விரிந்த தமிழின் உயிர்த்துடிப்பு நீரே,
உறவாய் இணைக்கும் அன்பின் ஒளிக்கதிரே!
தாய்மொழி தழைக்கத் தந்தைபோல் தாங்கி நிற்கும்
தன்னலமற்ற திரு உருவமே!

கடல் கடந்தும் காற்றாய் பரவி
காணாத உள்ளங்கள் கூடும் பாலம் அமைத்து,
"தமிழ்" என்றொரு சொல் கேட்டால்
தலை நிமிரச் செய்கிற தேச தீபமே!

பிள்ளை மனங்களில் விதைத்த தமிழ் விதை
பேரரசாய் வளர்கின்ற பெருமை உங்களதே
பழமையும் புதுமையும் பிணைக்கும் பாலம் நீரே,
பாரம்பரியப் பொக்கிஷம் காக்கும் காவலரே!


அகர முதலாய் உலகம் அறிந்த
அம்மொழியின் ஆழம் உணர்த்தி,
அன்பை ஆயுதமாய் ஏந்தி
அயராது உழைக்கும் ஆன்மிகத் தலைவர் நீரே!

உலகத் தமிழர் உறவுகளின்
உயிர்க்கோட்டாய் நிற்கும் உம்மை
மரியாதையுடன் வணங்குகின்றேன்
மொழிப் பற்றின் முத்திரையாய் விளங்குகின்றீர்!

உங்கள் உடல் நலம் உறுதியாக,
உற்சாகம் ஊற்றாக ஓடட்டும்
நீண்ட ஆயுள் நலமுடன் தழைத்து,
நிறை செல்வம் உங்கள் இல்லம் நிரப்பட்டும்.

அறிவின் ஒளி மேலும் மேலும் பெருகி,
அன்பின் அருள் உலகம் முழுதும் பரவ,
தமிழ் தாய் உங்களை ஆசீர்வதித்து
தலைமுறை தோறும் புகழ் நிலைக்கட்டும்.

நீர் விதைத்த நற்பணி விதைகள்
நூற்றாண்டுகள் பலன் தரட்டும்
உங்கள் சேவைச் சுவடுகள்
உலகத் தமிழர் உள்ளங்களில் என்றும் நிலைத்திடட்டும்!



– தர்சி, படிமுறைத்தமிழ்
மொழியியலும் பயன்பாடும், மாணவி, இலங்கை

# படிமுறைத் தமிழ் - 2026 சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறோம்





















### தமிழின் திருவுருவம் – படிமுறைத் தமிழின் பயணம்

தமிழே... மண்ணின் மணமும் மனிதனின் மூச்சும் நீயே... பழமையின் பக்கங்களில் உறங்கினாலும்
இன்றும் உயிரோடு ஒலிக்கும் இசையே நீ...
பாறைகளில் பொறிக்கப்பட்ட வரலாறாய்
சங்கத்தின் சுவாசமாய் பிறந்த நீ,
அறத்தின் அடித்தளமாய்
அகரத்தில் தொடங்கும் அதிசய மொழியே நீ...

### படிமுறைத் தமிழின் வெளிச்சம் – அய்யாவின் அர்ப்பணிப்பு

தமிழ் எழுத்தின் நுட்பத்தை உணர்த்த
ஓர் ஒளியாய் எழுந்தவர் — சித்தம் அழகியான் இராசரத்தினம் ஐயா அவர்கள்.
அவர் ஓர் ஆசிரியர் மட்டும் அல்ல...
தமிழின் ஒலியை உயிராக்க வந்த ஒரு பயணமே அவர்.
அய்யா அவர்கள் கற்றுத்தந்தது
எழுத்தின் வடிவம் அல்ல...
அதன் உயிர், அதிர்வு, உணர்வு.
"எழுத்து என்பது நினைவல்ல...
அது மூச்சின் ஒழுங்கு" என்ற அவரது வார்த்தை
தமிழ் கற்றலின் புதிய கதவையே திறந்தது.
ஒவ்வொரு எழுத்தையும்
ஓர் உயிராக உணரச் செய்தவர் அவர்.

### உச்சரிப்புப் பயிற்சியில் அய்யாவின் பெருமை

அ, ஆ என்று சொன்னால்
அம்மாவின் அன்பு அருகே வருவதை உணரச் செய்தவர் அவர்...
இ, ஈ என்று நீட்டினால்
இளமைக்குள் இனிமை பிறக்கும் என்று அனுபவமாக்கினார்...
நாக்கின் அசைவும்,
உதட்டின் நுட்பமும்,
மூச்சின் ஓட்டமும் ஒன்றாக இணைந்து
தமிழ் இசையாக மாறும் இரகசியத்தை
அய்யா அவர்கள் எளிமையாக உலகுக்குக் காட்டினார்.
பெரியோரும் சிறியோரும்
ஒரே பாதையில் கற்றுக்கொள்ளும் வகையில்
அவர் உருவாக்கிய படிமுறை
ஒரு கல்வி முறையல்ல...
அது தமிழை உயிராக்கும் இயக்கம்.

### முதல் மூன்று நாட்கள் – அய்யாவின் வழிகாட்டலில் ஓர் அனுபவப் பயணம்

முதல் நாள் —
உயிரெழுத்தின் வாசல் திறந்தது...
ஒவ்வொரு ஒலியும் குழந்தைபோல் சிரித்தது...
அய்யாவின் வழிகாட்டுதலால்
எழுத்து ஓர் அனுபவமாக மாறியது.
இரண்டாம் நாள் —
மெய்யெழுத்தின் உறுதி கற்றோம்...
வடிவம் பெற்ற ஒலிகள் நம்மை வளர்த்தன...
தமிழின் அடித்தளம் உறுதியாக நின்றது.
மூன்றாம் நாள் —
உயிர்மெய்யில்
உலகம் விரிந்தது...
சொற்கள் உயிர் பெற்றுப் பேசத் தொடங்கின...
அந்த மாற்றத்தின் பின்னால்
அய்யாவின் துல்லியமான கற்பித்தல் ஒளிந்திருந்தது.

### ஈழ மண் முதல் கனடா வரை — அய்யாவின் தமிழ் பயணம்

ஈழத்து மண்ணில் பிறந்து
கனடாவின் குளிர் காற்றில் வாழ்ந்தாலும்
அவர் சுமந்தது ஒரு நாடு அல்ல...
தமிழ் எனும் உயிர் அடையாளம்.
உலகின் பல தேசங்களில்
தமிழ் தீபம் ஏற்றும் நோக்கில்
அவர் உருவாக்கிய "படிமுறைத் தமிழ்"
ஒரு நிறுவனம் மட்டுமல்ல...
**அது தமிழின் மறுமலர்ச்சி இயக்கம்.**
மொழி ஒரு பாடமாக மட்டும் இருக்கக் கூடாது...
அது மக்களின் வாழ்வும், உணர்வும், அடையாளமும் ஆக வேண்டும் என்ற உயர்ந்த கனவோடு
அய்யா அவர்கள் இன்று வரை நடக்கிறார்.

### தமிழின் தொடர்ச்சி – அய்யாவின் பங்களிப்பு

"அறம் செய விரும்பு" என்ற ஒரே வரியை
வாழ்வின் விதியாக்கிய வள்ளுவனின் மொழியை
இன்றும் வாழவைக்கும் முயற்சியில்
அய்யா அவர்கள் ஒரு தீபம் போல நிற்கிறார்.
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற
ஒற்றுமையின் குரலை
புதிய தலைமுறையின் நாவில்
உச்சரிக்கச் செய்த பெருமை அவருக்கே.
தமிழ் அவருக்கு ஒரு கல்வி அல்ல...
அது ஒரு தொண்டு, ஒரு தவம், ஓர் உயிர்ப்பணி.

தமிழ் ஒரு மொழி அல்ல...
அது ஓர் உயிர் ஓசை.
அந்த ஓசையை
உயிராக உணரச் செய்யும்
அய்யாவின் முயற்சிகள்
ஒரு கல்வி இயக்கம் மட்டுமல்ல...
அது ஒரு பண்பாட்டு புரட்சி.
படிமுறைத் தமிழின் பயணம்
எழுத்தை மட்டுமல்ல...
மனங்களையும், தலைமுறைகளையும் இணைக்கும்
ஒரு பொற்கோயிலாக
என்றும் ஒளிரட்டும்...

Apirl 15, 16, 17 இல் பேரூரில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட என் அனுபவப் பகிர்வு -
விஜேகுமாரன் தர்ஷிகா





padimuraitamil.com

# படிமுறைத் தமிழ் - 2026 சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறோம்




Rajan Subramaniam ,B.Eng
SALES REPRESENTATIVE
416-716-4000
rajansubra@gmail.com
HomeLife/Future
Realty Inc., Brokerage
Independently Ownder And Operated
HOMELIFE
905-201-9977
905-201-9229
205-7 Eastvale Drive
Markham ON L3S 4N8



VANI KANTHASAMY
INSURANCE BROKER
416-856-5614
Vanisamyinsurance@gmail.com
www.vanisamyinsurance.ca
Unit- 211, 885 Progress Ave
Scarborough ON M1H 3G3
Vanisamy Insurance
Auto, Home, Commercial, Life, Health, Travel, Disability

விஜய் அரைக்கும் ஆலை
VIJAY
TAKEOUT & GRINDING MILL
உங்கள் வீட்டிற்குத் தேவையான தூள் அரைத்தல், ஊறவைத்த அரிசியை அரைத்தல், வறுத்தல், மற்றும் உடனுக்குடன் தயாரிக்கப்படும் அவித்த மா
அனைத்து தேவைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்!
- We Offer Custom Grinding For Grains And Millets.
- Grinding Mill With Outlet For Spices, Millets & Grain.

Grinding Cost Starts From $1 Per Lb
416-613-5722
vijaytakeout@gmail.com
www.vijaymill.ca
127 Westmore Drive, Unit#124,
Central Etobicoke, On,
7 DAYS A WEEK 10AM–7PM

VR Event Planner
Vimal
416-508-2433
Experience the Difference
Best Quality Food & Services
- Business Meetings
- Family Get-together
- Engagement Parties
- Wedding Parties
- Puberty Ceremonies
- We do all Home Parties and Home Decor

G6 STYLE CABINETS
12 Principal Road, Unit 4,
Scarborough, ON
M1R 4Z3
647-351-1177
416-558-5492
647-351-1277
Specializing in kitchen cabinets, vanities, custom build closets and Office Furniture,

# படிமுறைத் தமிழ் முறையில் கற்றுப் பயின்று, ஆசிரியர்களுக்கு வகுப்புகளில் உதவியாக செயற்படும் உதவி ஆசிரியர்கள்...

- **சகிரா சுகுமாரன்:** தலைமை அலுவலகம் - Scarborough
- **ஆதிரை சியாம்சுந்தர்:** தலைமை அலுவலகம் - Scarborough
- **விக்ராந்த் சந்திரமோகன்:** படிமுறைத்தமிழ் - Woodbridge
- **வினுஷா திருப்பரங்கிரி:** தலைமை அலுவலகம் - Scarborough
- **ஷாணா அலகேஸ்வரன்:** சிற்பி அகாடமி
- **ஆரணி இராஜமோகன்:** தலைமை அலுவலகம் - Scarborough
- **இனியா சிவகுமாரன்:** சிற்பி அகாடமி
- **குறிஞ்சி ஜெயரூபன்:** தலைமை அலுவலகம் - Scarborough
- **திவ்யா செல்லத்துரை:** படிமுறைத்தமிழ் - Stouffville
- **சுவாதி கேதீஸ்வரன்:** Durham தமிழ் சங்கம்
- **ஸ்ருதி கேதீஸ்வரன்:** Durham தமிழ் சங்கம்
- **நிகிஷா யோஹரன்:** Durham தமிழ் சங்கம்
- **செல்வரத்தினம் ஆரத்தி:** சிவஞானவதி கேசவதாஸ்
- **சர்வேஸ்வரன் அகர்னி:** சிவஞானவதி கேசவதாஸ்
- **பிரசத் விதுசா:** சிவஞானவதி கேசவதாஸ்
- **ஸ்டானிஸ்லாஸ் ஞானசேகரம்:** தலைமை அலுவலகம் - Scarborough
- **அபிஷியா எலங்கீதன்:** படிமுறைத்தமிழ் - Markham
- **விதுஜா ஸ்ரீராஜன்:** படிமுறைத்தமிழ் - Pickering

| TABLE SPONSORS | |
|---|---|
| 1 | UAMC & UGC PPA |
| 2 | Toronto Tamil Book Fair |
| 3 | Erlalai Well Wishers Association Canada |
| 4 | 747 Auto Parts |
| 5 | Golumbia Blinds & Shutters |
| 6 | Platinum Car and Truck Rental |
| 7 | Mr. Nimal Vinayagamoorthy |
| 8 | Mrs. Mirna Yogeswaran |
| 9 | Mr. Sajan Shanmuganathan |

| DONORS OVER $500 | |
|---|---|
| 1 | Mr. Vyramuthu Sornalingam |
| 2 | Dr. Visvalingam Vijayaratnam |
| 3 | Mr. Periathamby Navanathan |

| DONORS OVER $250 | |
|---|---|
| 1 | Mr. Panchan Palaninathan & Mr. Prasath Sathiyanathan |
| 2 | Live Well Pharmacy Inc. |
| 3 | Mr. Gunarajah Thuraisingam |
| 4 | Mr. Kumar Karalasingam |
| 5 | Mr. Karthikeyan Subramaniam |
| 15 | Sunfit Windows & Doors |

**படிமுறைத்தமிழ் பெருவிழா - 2026**

அனுசரணையாளர் விபரம்


The ESTATE BANQUET & EVENT CENTRE

JEET BANSAL
PRESIDENT & CEO

416-293-9292 / 416-560-0324
416-293-6850
JEET@ESTATEBANQUET.COM
WWW.ESTATEBANQUET.COM
430 NUGGET AVE,
SCARBOROUGH, ON, M1S 4A4

VDP Printing that is Impressive EST. 2012
Vikraanth Design & Print




Printing that is Impressive
Business Branding | Graphics Designs | Digital Printing | Large Format Printing
Offset Printing | Windows Graphics | Signs & Installations

BREEZE HEATING & COOLING
Sugu Manogharan
SERVICE & INSTALLATION

SERVICES
• Furnace
• Water Heater
• Air Condition
• Fireplace
• Heat Pump
• Gas Piping



Tel: 647-286-2225
Email: breezecomfortair@gmail.com

# “படிமுறைத்தமிழ்” – தமிழின் பேரொளி




கடல் கடந்தும்…
காலம் கடந்தும்…
கறைகள் தாண்டியும்…
தமிழின் மணத்தை உலகம் முழுதும் பரப்பிச் செல்லும்
அன்பு ஐயாவிற்கு என் இதயமார்ந்த வாழ்த்துகள்.

மொழி என்பது வெறும் சொற்களின் தொகுப்பு அல்ல,
ஒரு இனத்தின் மூச்சு…
ஒரு தலைமுறையின் நினைவு…
ஒரு நாகரிகத்தின் நெஞ்சுத்துடிப்பு

அந்தத் தமிழின் தீபத்தை
தம் உள்ளத்தில் ஏந்தி,
“படிமுறை தமிழ்” என்ற
பேரொளி நிறுவனத்தின் மூலம்
உலகமெங்கும் தமிழின் செல்வத்தை
விதைத்து வருவது

இன்று பலர் வாழ்வதற்காக உழைக்கின்றனர் – ஆனால்
நீங்கள் மொழி வாழ்வதற்காக உழைக்கிறீர்.

“தமிழ் வாழ்ந்தால்
தலைமுறை விழித்திருக்கும்
தமிழ் மறைந்தால்
வரலாறே மௌனமாகும்.”

ஒவ்வொரு நாட்டிலும்
ஒவ்வொரு உள்ளத்திலும்
தமிழின் ஓசை ஒலிக்க வேண்டும்
என்ற உங்கள் கனவு,
ஒரு மனிதரின் கனவு அல்ல…
ஒரு இனத்தின் எதிர்காலம்.

திருக்குறள் கூறுகிறது:
“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.”

அறிவைத் தெளிவாகக் கற்று,
அதை நிலைநிறுத்த வேண்டும் என்பதுபோல்,
நீங்கள் தமிழை மட்டும் கற்றுக் கொடுக்காமல்
அதை வாழ்வியலாக மாற்றி வருகிறீர்.

“மொழி காப்பவன்
மக்கள் மனம் காப்பவன்.”

உங்கள் ஒவ்வொரு முயற்சியும்
ஒரு விதை
அது நாளை
ஆயிரம் தமிழ்ச்செடிகளாக முளைக்கும்.

உங்கள் உற்சாகம் குறையாமல்,
உடல் ஆரோக்கியம் நிலைத்திருக்க,
இன்னும் நீண்ட ஆண்டுகள்
தமிழுக்காகத் தொடர்ந்து சேவை செய்ய
இறைவன் அருள் புரிவானாக.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.”

அறிவு பரவுவது போல,
நீங்கள் பரப்பும் தமிழ்
உலக மனங்களில்
என்றும் ஊற்றாக பெருகட்டும்.

“படிமுறை தமிழ்”
ஒரு நிறுவனம் மட்டுமல்ல…
தமிழை அடுத்த தலைமுறைக்கு
எடுத்துச் செல்லும்
ஒரு பண்பாட்டு பாலம்.

உங்கள் சேவை தொடரட்டும்…
தமிழின் புகழ் உயரட்டும்…
உங்கள் பெயர்
தமிழின் வரலாற்றில்
பொன்னெழுத்தாக நிலைத்திருக்கட்டும்.

வாழ்க தமிழ்!
வளர்க படிமுறை தமிழ்!
வாழ்க உங்கள் தமிழ்த் தொண்டு!

# வானம் தொடும் கனவுகள்...

தமிழ்த்தாயின் நெஞ்சில்
நீண்ட காலம் அடங்கியிருந்த
அசைவு,
உங்கள் குரலில் தான்
வாக்கியமாகிறது, ஐயா.

மௌனமாக இருந்த எழுத்துகள்
உங்கள் பார்வையில்
அர்த்தம் பெறுகின்றன.

உங்கள் எண்ணங்களில்
தமிழ்,
ஒரு மொழி அல்ல
ஒரு உயிர்.

மண் வாசம் மாறாமல்
வானம் தொடும் கனவுகள் வரை
தமிழைச் சுமந்து செல்கிறீர்.

பழைய ஓலைகளில் இருந்து
புதிய தலைமுறையின்
திரைகள் வரை
உங்கள் பயணம் தடையின்றி.
நேற்று கற்றுத் தந்தீர்,
இன்று காத்து நிற்கிறீர்,
நாளை நம்பிக்கையை
விதைக்கிறீர்.

காலம் நகர்கிறது,
ஆனால்
உங்களது தமிழ்ப்பற்று
ஒரு அடியும் கூட
பின்னே செல்லவில்லை.

புதுமை உங்கள் கரங்களில்
பழமை உங்கள் நெஞ்சில்.
இரண்டையும் இணைத்து
தமிழ் நடக்கும் பாதைக்கு
நிழலும் வெளிச்சமும்
நீங்களே.

புகழ் தேடாமல்
பணியைத் தேடி,
ஓய்வு கேட்காமல்
தொண்டையே சுவாசமாக்கி
தாய்மொழியின் காவலராக
நின்று கொண்டிருக்கிறீர்.

இது ஒரு வாழ்த்து அல்ல,
ஒரு நன்றியும் அல்ல
தமிழ் உயிரோடு இருப்பதற்கான
ஒரு சாட்சி.

தமிழ் பேசும் வரை
உம் பெயர் பேசப்படும்.
தமிழ் எழுதப்படும் வரை
உம் தடம் தொடரப்படும்.

தமிழ்த்தாய் சுவாசிக்கும் வரை
உம் சேவை
நினைவாக அல்ல
வாழ்வாகவே இருக்கும்.

## தமிழ்த் தொண்டின் தீபம்

தமிழ்த்தாயின் திருவடியில்
தினம் தன்னை அர்ப்பணித்த
தொண்டனாய் நிற்கும் ஐயா,
தூய்மையின் உருவமே நீர்.

எழுத்தெழுத்தாய் உயிர் ஊற்றி
சொல்லுக்குச் சுவை சேர்த்து
தமிழின் மணம் பரப்பும்
மாபெரும் பணியாளர் நீர்.

நேற்றும் தமிழுக்காய் நின்றீர்,
இன்றும் தமிழோடு வாழ்கின்றீர்,
நாளையும் தலைமுறைக்காய்
நற்சிந்தை விதைக்கின்றீர்.

பழமையும் புதுமையும் சேர்த்து
பாதை வகுத்து காட்டி
தமிழ் வளரும் திசையெல்லாம்
தீபமாய் ஒளிர்கின்றீர்.

உழைப்பில் ஓய்வில்லாது
உள்ளத்தில் சலனமின்றி
தமிழ் வளர வேண்டும் என
தன்னலம் துறந்தீர் ஐயா.

அத்தகைய தமிழ்ச் சேவைக்கு
அனைத்துலகும் வணங்கிடுமே
தாய்மொழி காக்கும் உங்கள் பாதம்
தலைவணங்கி போற்றுகிறோம்.

தமிழ் வாழ, தலைமுறை வாழ
உங்கள் தொண்டு தொடரட்டும்
தமிழ்த்தாய் மகிழும் வரை
உங்கள் பயணம் நிலைக்கட்டும்.

# NEW TAMIL CLASSES STARTING in many locations!

A NOVEL WAY OF LEARNING
இலகு, எளிமை, இனிமை

See our website for all available locations.

இந்நூற்றாண்டுக்கான தமிழ்க்கொடை எனத் தமிழக அரசால் பாராட்டப்பட்டு, கடந்த ஆண்டின் சிறந்த கல்விச்சேவைக்கான விருதை 2023 தை 13ஆம் நாளிற் பெற்றுக்கொண்ட, படிமுறைத்தமிழ் எனும் கற்பித்தல் முறைப்படி கற்கவும், கற்பிக்கவும் விரும்பும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## தமிழ்த் திறமைச்சித்தி வகுப்புகள்

**Summer 2026 & September Class**

Now Accepting Applications for
**Tamil Credit Course!**

Earn credits while building strong Tamil reading, writing, and speaking skills. Register Now!
9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் எங்கள் உயர்நிலைப் பள்ளித் திறமைச்சித்தி வகுப்புகளில் சேரலாம்!

**Padimurai Tamil in other Provinces**
Alberta
British Columbia
Montreal
**Online Classes Available!**

## Looking for a class near you?
**Visit our website to find the nearest location!**

* Don't miss out! Limited-time offer on new registrations at participating locations.

416-869-8252 | 416-821-5773

padimuraitamil  info@padimuraitamil.com

Website : padimuraitamil.com

# படிமுறைத்தமிழ் - பெருவிழா 2026



தமிழ் மொழியையும் தமிழர்தம் வாழ்வியலையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் மாண்புமிகு பணியை மேற்கொண்டு தொண்டாற்றி வரும் அனைவரையும் வரவேற்கிறோம்.

அத்துடன் இந்நிகழ்ச்சி தனது இலக்கில் வெற்றி பெறவும், சிறப்பாக அமையவும், சகல வழியிலும் பணியாற்றி உதவிய அனைவருக்கும் எமது நன்றி.

எமது சமூகப் பணியையும், இப் பெருவிழாவையும் சிறப்பாக முன்னெடுக்க நன்கொடை தந்த மதிப்புமிக்க, அன்புள்ளம் கொண்டோரையும், இந்தச் செல்வத்தைத் திரட்டுவதற்காக உழைத்த என் மதிப்புமிக்க செல்லங்களைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை.

இப்பெருவிழாவில் பங்கு கொண்டு சிறப்பித்தோரை வணங்கி வரவேற்கிறோம். இவ் விழா பற்றிய தகவல்களை எடுத்துச் சென்ற எம் ஊடக நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

எம்மோடு என்றென்றும் தோளோடு தோள் கொடுத்துச் செயலாற்றிய அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தமிழின் வாழ்வே தமிழரின் வாழ்வு"

அன்புடன்
சித்தம் அழகியான்
சு. இராசரத்தினம்

